**ஜூலை – 25**

# TNPSC துளிகள்

- 1984 ஆம் ஆண்டுப் பிரிவைச் சேர்ந்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரி மற்றும் மத்திய எரிசக்தித் துறை அமைச்சகத்தின் செயலாளரான அஜய் குமார் பல்லா என்பவர் மத்திய உள்துறை அமைச்சகத்தின் சிறப்புப் பணி அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவரது நியமனம் உடனடியாக நடைமுறைக்கு வருகின்றது.
  - பல்லா என்பவர் 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை மத்திய உள்துறைச் செயலாளராக நிலையான 2 ஆண்டுப் பதவிக் காலத்தைப் பெறவிருக்கின்றார்.
- 20-வது கார்கில் நினைவு தினத்தின் போது இராணுவத்தின் வடக்குப் பிராந்தியக் கமாண்டரான லெப்டினன்ட் ஜெனரல் ரன்பீர் சிங் என்பவர் இந்திய இராணுவத்தின் XIVவது படைப் பிரிவு குறித்து “ஆயுத மற்றும் சீற்றப் படை – வல்லமை, மனோபலம் மற்றும் தியாகத்தின் சரித்திரம்” என்ற ஒரு புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.
  - XIVவது படைப் பிரிவின் புனைப்பெயர் ஆயுத மற்றும் சீற்றப் படையாகும். இதன் தலைமையிடம் கார்கிலிலிருந்து 28 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கும்பாத்தாங்கில் அமைந்துள்ளது.
- பிரதமர் நரேந்திர மோடி “சந்திர சேகர் – கருத்தியல் அரசியலின் கடைசி உருவம்” என்ற ஒரு புத்தகத்தை வெளியிட்டுள்ளார். இந்தப் புத்தகம் மாநிலங்கள் அவையின் துணைத் தலைவரான ஹரிவன்ஷ் மற்றும் ரவி தத் பஜ்பாய் ஆகியோரால் எழுதப்பட்டதாகும்.

# தேசியச் செய்திகள்

## “யுகேய்ரி கல்விப் பயணத் திட்டம் : இந்தியாவில் பயில்வோம்”

- இந்தியா-ஐக்கிய இராஜ்ஜியம் ஆகிய நாடுகளுக்கிடையே “யுகேய்ரி கல்விப் பயணத் திட்டம் : இந்தியாவில் பயில்வோம்” என்ற ஒரு புதிய திட்டமானது சோதனை அடிப்படையில் தொடங்கப்பட்டது.
- இது ஐக்கிய இராஜ்ஜியத்திலிருந்து இந்தியாவிற்குப் பயணம் மேற்கொள்ளும் மாணவர்களுக்கு நிதியுதவி அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கல்விக்காக ஐக்கிய இராஜ்ஜிய மாணவர்களை இந்தியாவிற்கு அனுப்புவதற்கு பிரிட்டனின் பல்கலைக் கழகங்கள் இந்திய நிறுவனங்களுடன் இணையவிருக்கின்றன.
- இந்தத் திட்டம் ஐக்கிய இராஜ்ஜியத்தின் “சர்வதேசத்திற்குச் செல் : வெளியே சென்று கல்வி கல்” என்ற பிரச்சாரத்தின் ஒரு பகுதியாகும்.

## இந்த்ஸ்பேஸ்எக்ஸ் (IndSpaceEx) – முதலாவது விண்வெளிப் போர்ப் பயிற்சி

- இந்திய ஆயுதப் படைகள் நாட்டின் முதலாவது உருவகப்படுத்தப்பட்ட விண்வெளிப் போர்ப் பயிற்சியான “இந்த்ஸ்பேஸ்எக்ஸ்” என்ற பயிற்சியை நடத்தத் தயாராகியுள்ளன.

- பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழுள்ள ஒருங்கிணைக்கப்பட்ட முப்படை பாதுகாப்புப் பணியாளர்களுடன் அனைத்து இராணுவ மற்றும் அறிவியல்துறை சார்ந்த பங்காளர்கள் இப்பயிற்சியை நடத்த இருக்கின்றனர்.
- இந்த ஆண்டில் மார்ச் 27 அன்று செயற்கைக் கோள் எதிர்ப்பு ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.
- கண்காணிப்பு, தகவல் தொடர்பு, ஏவுகணை குறித்த முன்கூட்டிய எச்சரிக்கை மற்றும் துல்லியமான இலக்கு ஆகியவற்றிற்குப் பயனளிப்பதாக விளங்கும் இந்திய செயற்கைக் கோள்களை அழிக்க அல்லது செயலிழக்கச் செய்யும் எதிரி நாடுகளின் முயற்சிகளுக்குத் தடை ஏற்படுத்துவதற்கு இது போன்ற திறன் தேவையானதாக உள்ளது.

## தொழில்சார் ஆரோக்கியம் மற்றும் துப்புரவு நிறுவனம்

- மத்திய அமைச்சரவையானது தேசிய சுரங்கப் பணியாளர்கள் ஆரோக்கிய நிறுவனத்தை (National Institute of Miners' Health - NIMH) இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழு (ICMR/Indian Council of Medical Research) – தேசிய தொழில்சார் ஆரோக்கிய நிறுவனத்துடன் இணைப்பதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- NIHM ஆனது தொழில்சார் ஆரோக்கியம் மற்றும் துப்புரவுத் துறையில் பயன்பாட்டு ஆராய்ச்சியை மேற்கொள்கின்றது. இது சுரங்கம் மற்றும் கனிமம் சார்ந்த தொழிற்சாலைகளுக்குத் தொழில்நுட்ப உதவிகளை அளிக்கின்றது.
- பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : கோலார் தங்க வயல், கர்நாடகா
- இது 1990 ஆம் ஆண்டில் இந்திய அரசினால் அமைக்கப்பட்டது.

## "Hand in Hand" இராணுவப் பயிற்சி

- இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கிடையேயான "Hand in Hand" என்ற கூட்டு இராணுவப் பயிற்சியின் 2019 ஆம் ஆண்டுப் பதிப்பானது 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மேகாலயாவின் ஷில்லாங்கிற்கு அருகில் உள்ள உம்ரோயில் நடைபெறவிருக்கின்றது.
- இது தீவிரவாத எதிர்ப்பு, மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் மீட்பு நடவடிக்கைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு நடைபெறும் இரண்டு வார காலப் பயிற்சியாகும்.
- இது சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளிலிருந்து தலா 120 இராணுவ வீரர்களைக் கொண்டு நடைபெறும் ஒரு படை அளவிலான பயிற்சியாகும்.

## மெட்ரோலைட் இரயில்கள்

- மத்திய அரசு "மெட்ரோலைட்" என்ற பெயர் கொண்ட ஒரு சிறு நகர இரயில் போக்குவரத்து அமைப்பைப் பரிந்துரைத்துள்ளது.
- இது குறைந்த அளவு பயணத் தொலைவுள்ள நகரங்கள் மற்றும் சிறு நகரங்களில் அறிமுகப்படுத்தப்பட விருக்கின்றது.
- ஒவ்வொரு இரயிலும் 3 பெட்டிகளைக் கொண்டிருக்கும். இதன் வேகம் ஒரு மணி

நேரத்திற்கு 25 கிலோ மீட்டர் அளவாகக் கட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

❖ நிலத்தின் மேற்பரப்பு மற்றும் உயர்த்தப்பட்ட பாதைகளில் ஏற்படுத்தப்படவிருக்கும் இந்த "மெட்ரோலைட் அமைப்பின்" தர அம்சங்களை மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான அமைச்சகம் வழங்கியுள்ளது.

❖ மெட்ரோலைட் அமைப்பு தானியங்கி கட்டண வசூலிப்புக் கதவுகள், நடைமேடை திரை வாயில்கள், எக்ஸ் கதிர் மற்றும் உடைமைகள் வருடி ஆகியவற்றைக் கொண்டிருக்கிறது.


# சர்வதேசச் செய்திகள்

## ஏழை இடப்பெயர்வாளர்களது மீள்குடியேற்றம்

❖ ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த 8 நாடுகள் பிரான்சு மற்றும் ஜெர்மனியால் பரிந்துரைக்கப்பட்ட ஒரு இடப்பெயர்வாளர்கள் மீள்குடியேற்றத் திட்டத்திற்கு ஒப்புக் கொண்டுள்ளன.

❖ இந்த நாடுகள் மத்தியத் தரைக்கடலில் மீட்கப்பட்டுள்ள லட்சக்கணக்கான இடப்பெயர்வாளர்களைப் பகிர்ந்து கொள்ள ஒப்புக் கொண்டுள்ளன.

❖ ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான இடப்பெயர்வாளர்கள் தரைக்கடலைக் கடந்து ஐரோப்பாவிற்குச் செல்ல முயற்சிக்கின்றனர். அவர்கள் மிக முக்கியமான பகுதியான லிபியாவிலிருந்துப் புறப்படுகின்றனர்.




## தியாங்காங் 2 : சீனா

❖ சீனாவின் ஒரு மனித விண்வெளி நிலையமான தியாங்காங் – 2 ஆனது ஜூலை 19 அன்று பசிபிக் பெருங்கடல் பகுதியில் பூமியின் வளிமண்டலத்திற்குள் அதன்

கட்டுப்படுத்தப்பட்ட மறு நுழைவின் (மீண்டும் திரும்பி வருதல்) போது அழிக்கப்பட்டது.

- தியாங்காங் – 2 ஆனது 2016 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 அன்று செலுத்தப்பட்டது. 2016 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இந்த விண்வெளி நிலையத்தில் 2 விண்வெளி வீரர்கள் 30 நாட்கள் தங்கியிருந்தனர்.
- இது சீனாவின் மிக நீண்ட மனித விண்வெளித் திட்டமாக இதுநாள் வரை இருந்து வருகின்றது.
- புவியில் உள்ள மிகவும் தொலைதூரப் பகுதியான நெமோ என்ற புள்ளிக்கு அருகில் விண்வெளிக் கழிவுகள் விழுகின்றன.

# பொருளாதாரச் செய்திகள்

## சர்வதேசப் புத்தாக்கக் குறியீடு 2019

- 2019 ஆம் ஆண்டு ஜூலை 24 அன்று வணிக மற்றும் தொழிற்துறை அமைச்சர் பியூஷ் கோயல் 2019 ஆம் ஆண்டின் சர்வதேசப் புத்தாக்கக் குறியீட்டை (Global Innovation Index - GII) புது தில்லியில் வெளியிட்டார்.
- இந்தியா கடந்த ஆண்டை விட 5 இடங்கள் முன்னேறி 52-வது இடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- மத்திய மற்றும் தெற்கு ஆசியாவில் மிகவும் புத்தாக்கம் பெற்ற பொருளாதாரமாக இந்தியா தொடர்கிறது என்று இந்த அறிக்கை கூறுகின்றது.
- GII என்பது ஒரு பொருளாதாரத்தின் புத்தாக்கச் செயல்பாட்டை அளவிடுவதற்கான ஒரு முன்னனி ஆதாரமாக விளங்குகின்றது. இது GII-ன் 12-வது பதிப்பாகும்.
- இது கார்னெல் பல்கலைக் கழகம், இன்சீட் வணிகப் பள்ளி மற்றும் உலக அறிவுசார் சொத்து நிறுவனம் ஆகியவற்றால் வெளியிடப்பட்டது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## பொருட்களை எடுத்துச் செல்லும் பைகள் - சோனாலி

- வங்க தேசத்தில் உள்ள ஆராய்ச்சியாளர்கள் சணல் இழைகளை “சோனாலி” என்ற குறைந்த செலவுடைய உயிரியால் சிதைவுறக் கூடிய செல்லுலோஸ் தாள்களாக மாற்றுவதற்கான ஒரு முறையை உருவாக்கியுள்ளனர்.
- இது பொருட்களை மூடி வைக்கும் உறை பொருளாகவும் பொருட்களை எடுத்துச் செல்லும் பையாகவும் பயன்படுத்தப் படுகின்றது.
- இந்த கண்டுபிடிக்கப்பட்ட சணல் மற்றும் நெகிழி ஆகியவற்றின் வெளிப்புறப் பண்புகள் மிகவும் ஒத்தவையாக உள்ளன.
- ஆனால் சுற்றுச்சூழலுக்கு உகந்த இந்த சணல்பைகள் மனிதர்களுக்குத் தீங்கு விளைவிப்பதில்லை.
- இது வங்க தேச அரசுக்குச் சொந்தமான சணல் ஆலைக் கழகத்தினால் மேம்படுத்தப்பட்டதாகும்.




## செம்முகக் குரங்குகள்

- மத்தியச் சுற்றுச்சூழல் துறை அமைச்சகம் இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள செம்முகக் குரங்குகளை (ரெகசஸ் மக்காக்) "வெர்மின்களாக" (தீங்கு ஏற்படுத்தும் விலங்குகள்) அறிவித்துள்ளது.
- இது ஓராண்டுக் காலத்திற்கு சில அடையாளம் காணப்பட்ட வணங்களற்ற பகுதியில் இந்த விலங்குகளைக் கொல்லுவதற்கு உள்ளூர் அதிகாரிகளுக்கு அனுமதி வழங்குகின்றது.
- இந்தக் குரங்குகள் வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம் 1972-ன் அட்டவணை II-ன் கீழ் பாதுகாக்கப்பட்ட இனங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.
- ஆனால் இச்சட்டத்தின் 62-வது பிரிவு "வெர்மின்" என்ற விலங்குகளாக அறிவிக்கக் கோரும் வனவிலங்குகளின் பட்டியலை மாநில அரசுகள் மத்திய அரசிற்கு வழங்க அதிகாரம் அளிக்கின்றது.

## டிராகன் மர இனங்கள்

- ஆராய்ச்சியாளர்கள் அசாமின் மேற்கு கர்பி அங்லாங் மாவட்டத்தின் டோங்கா சப்ரோ பகுதியில் "டிராகாயெனா கம்போடியானா" என்ற ஒரு டிராகன் மர இனத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.
- இந்தியாவிலிருந்து ஒரு டிராகன் மர இனம் பதிவாகியிருப்பது இதுவே முதல்முறையாகும்.
- இந்த மர இனங்கள் காற்றுடன் தொடர்பு கொண்ட பின்பு அதன் மென்மரப் பகுதி பிரகாசமான சிவப்பு நிறமாக மாறும்.

# விளையாட்டுச் செய்திகள்

## உலக டெஸ்ட் கிரிக்கெட் சாம்பியன்ஷிப்

- சர்வதேச கிரிக்கெட் ஆணையமானது (ICC - International Cricket Council) உலகக் கோப்பை ஒருநாள் கிரிக்கெட் தொடரைப் போன்று உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப்பைத் தொடங்க முடிவு செய்துள்ளது.
- இந்த சாம்பியன்ஷிப்பின் முதல் போட்டியானது இங்கிலாந்தில் உள்ள எட்க்பாஸ்டன் கிரிக்கெட் மைதானத்தில் ஆகஸ்ட் 01 ஆம் தேதி முதல் 05 ஆம் தேதி வரை இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலியாவிற்கு இடையே விளையாடப் படவிருக்கின்றது.
- அனைத்து அணிகளுக்கும் 2 ஆண்டு காலத்தில், அந்த அணிகளின் செயல்பாட்டைப் பொறுத்துப் புள்ளிகள் வழங்கப்படவிருக்கின்றன.
- முதல் 2 அணிகள் 2021 ஆம் ஆண்டில் நடைபெறும் உலகக் கோப்பை டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டியை எதிர்கொள்ளவிருக்கின்றன.
- இத்தொடரில் ஆப்கானிஸ்தான், அயர்லாந்து மற்றும் ஜிம்பாவே ஆகிய நாடுகள் கலந்து கொள்ளவில்லை.

| Matches in series | Points for a win | Points for a tie | Points for a draw |
|---|---|---|---|
| 2 | 60 | 30 | 20 |
| 3 | 40 | 20 | 13.3 |
| 4 | 30 | 15 | 10 |
| 5 | 24 | 12 | 8 |

# முக்கிய தினங்கள்

## வருமான வரி தினம் - ஜூலை 24

- 2019 ஆம் ஆண்டு ஜூலை 24 அன்று மத்திய நேரடி வரிகள் வாரியம் (CBDT - Central Board of Direct Taxes) 159-வது வருமான வரி தினத்தை அனுசரித்தது.
- 1860 ஆம் ஆண்டு ஜூலை 24 ஆம் தேதி சர் ஜேம்ஸ் வில்சனால் இந்தியாவில் முதன்முறையாக வருமான வரி அறிமுகப்படுத்தப்பட்டது.
- இது ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக 1857 ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் இந்தியச் சுதந்திரப் போரின் போது பிரிட்டிஷ் ஆட்சிக்கு ஏற்படுத்தப்பட்ட இழப்புகளை ஈடு செய்ய அறிமுகப்படுத்தப் பட்டது.

# இதரச் செய்திகள்

## பட்சர் ஆப் பெய்ஜிங் – லீ பெங்

- 1989 ஆம் ஆண்டு தியான்மென் போராட்டத்தின் போது இராணுவச் சட்டத்தை அமல்படுத்துவதற்கு உத்தரவிட்ட சீனாவின் முன்னாள் பிரதமரான லீ பெங், தனது 90-வது வயதில் காலமானார்.
- 1989ல் ஜனநாயகச் சார்பு ஆதரவாளர்கள் மீதான தியான்மென் சதுக்கத்தில் மிகக் கொடுமையான ஒடுக்குமுறையில் இவர் ஆற்றியப் பங்கிற்காக இவர் "பட்சர் ஆப் பெய்ஜிங்" (பெய்ஜிங்கின் கசாப்புக்காரர்) என்று அழைக்கப்படுகின்றார்.
- 1989 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், ஜனநாயக சீர்திருத்தங்களுக்கு ஆதரவாக ஆயிரக்கணக்கான சீன மாணவர்கள் தியான்மென் சதுக்கத்தில் ஒன்று கூடினர்.
- இப்போராட்டத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். இப்போராட்டம் விரைவாக முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.



- - - - - - - - - - - - - - -